பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 27 வியாழக்கிழமை 12.08.2021 கதிர் 146

## யாழ். பல்கலைக்கழகத்தில் தொற்று நீக்கும் செயற்பாடு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நிர்வாகக் கட்டடத் தொகுதியில் பணியாற்றிய ஊழியர் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மரணமடைந்தமையைத் தொடர்ந்து, நிர்வாகக் கட்டடத்தொகுதி முழுவதும் தொற்று நீக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

துணைவேந்தரின் அறிவுறுத்தலின்படி, நிர்வாகக் கிளையினரால் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணத்தில் இ.போ.ச. பஸ் கவிழ்ந்து விபத்து; 20 பேர் காயம்; ஐவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில்!

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

காரைநகரிலிருந்து இன்று காலை யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த இ.போ.ச. பஸ் கல்லுண்டாய் வீட்டுத்திட்டப் பகுதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 20 பேர் காயமடைந்துள்ளனர்.

அவர்கள் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அவர்களில் ஐவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காரைநகர் சாலைக்குச் சொந்தமான குறித்த இ.போ.ச. பஸ், தனியார் பஸ் ஒன்றை முந்த முற்பட்டபோதே கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# அடுத்த 2 வாரங்களில் டெல்டா மேலும் தீவிரம்



### மிகவும் முக்கியமானது உணவா? ஒட்சிசனா? அரசு தீர்மானிக்க வேண்டும் என்கிறார் சந்திம

**கொரோனா வைரஸின் திரிவு வைரஸான டெல்டாவின் தாக்கம் அடுத்த இரண்டு வாரங்களில் இலங்கையில் மேலும் தீவிரமடையும்.**

**- இவ்வாறு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளரான பேராசிரியர் வைத்தியர் சந்திம ஜீவந்தர எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

☞ 2

## வவுனியாவில் மேலும் 84 பேருக்கு இன்று கொரோனாத் தொற்று உறுதி

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் மேலும் 84 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகள் சில இன்று வெளியாகின.

அதில் நெளுக்குளம் பகுதியில் இருவருக்கும், சிறிநகர் பகுதியில் நான்கு பேருக்கும், அண்ணா நகர் பகுதியில் ஒருவருக்கும், அவுசலப்பிட்டிய பகுதியில் இருவருக்கும், தவசிகுளம் பகுதியில் நான்கு பேருக்கும், சின்னச்சிப்பிகுளம் பகுதியில் இருவருக்கும், நேரியகுளம் பகுதியில்

☞ 2

## கரைச்சி பிரதேச சபை தவிசாளர் உட்பட 4 உறுப்பினர்களுக்கு கொரோனா உறுதி

கிளிநொச்சி மாவட்டம், கரைச்சி பிரதேச சபையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான உறுப்பினர்களின் எண்ணிக்கை 04 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், இன்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் தவிசாளர் உட்பட மேலும் 03 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## ஊழியருக்குக் கொரோனாத் தொற்று; கொடிகாமம் மக்கள் வங்கி முடக்கம்!

யாழ்., தென்மராட்சி, கொடிகாமம் மக்கள் வங்கிக் கிளையின் ஊழியர் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொடிகாமம் பகுதியில் இன்று மேற்கொள்ளப்பட்ட எழுமாற்றான பரிசோதனையின்போதே குறித்த ஊழியர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

☞ 2

## எழுமாற்று அன்டிஜன் பரிசோதனைகளில் தென்மராட்சியில் 17 பேருக்கு கொரோனா

யாழ்., தென்மராட்சியில் இன்று மேற்கொள்ளப்பட்ட எழுமாற்றான அன்டிஜன் பரிசோதனையில் 11 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அச்சுவேலியில் செயற்படும் சிறுவர் நன்னடத்தைப் பிரிவின் கைதடிப்பணிமனையில் பணியாற்றும் ஊழியர்கள் இருவருக்கும், கைதடியில் செயற்படும் சமூக சேவைத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மூன்று பேருக்கும், கொடிகாமத்தில் மக்கள் வங்கி ஊழியர் மற்றும் பொதுமக்கள் ஐவருக்கும்,

☞ 2

## லாப்ஸ் சமையல் எரிவாயு விலை திடீரென அதிகரிப்பு

லாப்ஸ் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 363 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 12.5 கிலோ கிராம் சிலிண்டரின் கொழும்பு விலை 1,856 ரூபாவாக உயர்வடைந்துள்ளது.

அத்துடன், 5 கிலோகிராம் சிலிண்டரின் விலை 743 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்துக்கும் அதன் விலை வேறுபடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## லிட்ரோ எரிவாயுவின் விலையை அதிகரிக்கத் தீர்மானிக்கவில்லை

### அரசு தெரிவிப்பு

லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிக்கத் தீர்மானிக்கவில்லை என்று இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் லாப்ஸ் சமையல் எரிவாயுவின் விலைகளை அதிகரிக்க நுகர்வோர் விவகார அதிகார சபை அனுமதி வழங்கியுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## சமையல் எரிவாயு உற்பத்தி; அதிரடி முடிவெடுத்தது அரசு

மக்களுக்கு நியாயமான விலையில் சமையல் எரிவாயுவை உற்பத்தி செய்து வழங்குவதற்கு புதியதொரு நிறுவனத்தை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கீழ் அமைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இந்த வாரம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

☞ 2

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



## சமையல் எரிவாயு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டுக்குத் தேவையான சமையல் எரிவாயுவில் 5 சதவீதம் மாத்திரமே இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உற்பத்தி செய்து அரசுக்குச் சொந்தமான லிட்ரோ காஸ் லங்கா நிறுவனத்துக்கும் தனியார் லாப்ஸ் காஸ் நிறுவனத்துக்கும் விநியோகிப்பதற்காக வழங்கி வருகின்றது.

வலுசக்தி அமைச்சர் இதற்கான முதற் கட்ட நடவடிக்கையை, தினமொன்றுக்கு ஒரு லட்சம் பீப்பாய் உற்பத்தித் திறன் கொண்டதாக சப்புகஸ்கந்தையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தொடர்பில் ஏற்கனவே அமுல்படுத்தியுள்ளார்.

இந்தப் புதிய சுத்திகரிப்பு நிலையக் கட்டுமாணம் பூர்த்தியானதும் நாட்டின் 20 சதவீத சமையல் எரிவாயு தேவையை உற்பத்தி செய்ய முடியும் என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

## வவுனியாவில் மேலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவருக்கும், சின்னப்புதுக்குளம் பகுதியில் இருவருக்கும், கனகராயன்குளம் பகுதியில் கர்ப்பவதிப் பெண் ஒருவருக்கும், அரசடிக்குளம் பகுதியில் மூன்று பேருக்கும், இராசேந்திரங்குளம் பகுதியில் இருவருக்கும், தம்பனைபுளியங்குளம் பகுதியில் ஏழு பேருக்கும், கல்மடு பகுதியில் ஏழு பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் சிறிராமபுரம் பகுதியில் ஒருவருக்கும், ஓமேக்கா ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் ஒருவருக்கும், கல்குண்ணாமடு பகுதியில் ஒருவருக்கும், மகாறம்பைக்குளம் பகுதியில் மூன்று பேருக்கும், சாந்தசோலை பகுதியில் மூன்று பேருக்கும், சிறைச்சாலை கைதிகள் ஐந்து பேருக்கும், சுகாதார திணைக்கள விடுதியில் மூன்று பேருக்கும், வவுனியா இலங்கை போக்குவரத்து சபையில் பணியாற்றும் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, திருநாவற்குளம் பகுதியில் ஒருவருக்கும், சுந்தரபுரம் பகுதியில் ஒருவருக்கும், நெடுங்குளம் பகுதியில் ஒருவருக்கும், நெடுங்கேணி பகுதியில் ஆறு பேருக்கும், நெல்வேலிக்குளம் பகுதியில் ஒருவருக்கும், சிவபுரம் ஒருவருக்கும், செட்டிகுளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 13 பேருக்கும், போகவ்வேவ பகுதியில் ஒருவருக்கும், தாலிக்குளம் பகுதியில் ஒருவருக்கும், வைரவ புளியங்குளம் பகுதியில் ஒருவருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மேற்படிதொற்றாளர்களைகொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைச்சுயதனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (100)

## எழுமாற்று அன்டிஜன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒருவருக்கும், மிருசுவில் பகுதியில் ஒருவருக்கும், தவசிகுளம் பகுதியில் தாய், மகள் உள்ளிட்ட இருவருக்கும், வரணி பகுதியில் ஒருவருக்கும், மட்டுவில் பகுதியில் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தென்மராட்சியில் இன்று 104 பேருக்கு அன்டிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஊழியருக்குக் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதையடுத்து கொடிகாமம் மக்கள் வங்கியின் செயற்பாடுகள் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து குறித்த வங்கியில் கடமையாற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் பரிசோதனை மேற்கொண்ட பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்கப்படும் என்று சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

## அடுத்த.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களத் தொலைக்காட்சி ஒன்றின் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலைமையில் மிகவும் முக்கியமானது உணவா? அல்லது ஒட்சிசனா? என்பது தொடர்பில் அரசு தீர்மானிக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக அடுத்த இரண்டு - மூன்று வாரங்கள் மிகவும் தீர்மானமிக்கவை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

5 விநாடிகள் முகக்கவசம் அணியாமல் இருந்தால்கூட நமக்குத் தொற்று ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது என்றும், இது பரவாமல் தடுக்கக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


**வேலைவாய்ப்பு**

சமையலுக்கு பெண் உதவியாளர் தேவை.

தொடர்புகளுக்கு - 076 740 3814

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம்- 076 443 8622

ஸ்ரீ பாலாம்பிகை துணை



**ஸ்ரீ அம்மன் அருள்ஜோதிட நிலையம்**

எண்.12, [ தரைதளம் ] அம்மன் கோயில் தெரு,
வடபழனி, சென்னை - 600 026.



' ஜோதிட ரத்னா '
**R.ராஜசேகர்** B.A.,M.A.,( astro ).,

அ. ஜாதகம் கணிப்பது
ஆ.பிரஸன்னம் பார்ப்பது [ஸ்பெஷல்]

- திருமணப் பொருத்தம்
- திருமணத் தடைகள்
- காதல் & மண வாழ்க்கை
- சொத்துப் பிரச்சனைகள்
- உறவினர்கள்
- குடும்ப நலம்
- தொழில் மற்றும் பங்குதாரர்கள்
- புகழ் மற்றும் வளர்ச்சி
- கல்வி மற்றும் அதன்துறைகள்
- உடல் நலம்
- வீடு & மனை அமைவது
- வாரிசுகள் அல்லது வாரிசுகள் அமைப்பு...

ஜாதகம் & பிறந்த தேதி இல்லையென்றாலும் பிரஸன்னம் மூலமாக மிகச்சரியான பலன்கள் கணித்துத்தரப்படும் ..!

நேரில் அல்லது ஸ்கைப் / வாட்ஸ் அப் மொபைல் - வீடியோகால் மூலமாகவும் பலன்கள் தெரிந்துகொள்ளலாம்

முன்பதிவிற்கு தொடர்புகொள்ள : மொபைல் [அ] வாட்ஸ்அப்
உலகின் எப்பகுதியில் இருந்தும் தொடர்புகொள்ளலாம்

**+919790807046**

Rajasekardevika@yahoo.in

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## அபத்த அறிவுரை போதும்!

'தவறை ஒப்புக்கொள்வோம்; ஆனால் திருத்திக்கொள்ளவே மாட்டோம்' என்று பிடிவாதம் பிடிக்கிறது கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிப்பீடம்.

கொரோனாவால் நாடு மரணங்கள் மலிந்த பூமியாக மாறப்போகின்றது. அதற்கு முன்னர் நாட்டை முடக்கி மக்களைப்பாதுகாருங்கள்என்றுஎல்லோரும்கெஞ்சியாகிவிட்டது.

மருத்துவத்துறையினர், சுகாதாரத் தரப்பினர், நுண்ணியல் விற்பன்னர்கள், புலமைசார் நிபுணர்கள் எல்லோரும் கூறிவிட்டனர்.

ஆனால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவரின் இராணுவ மனநிலைசார் அதிகார வர்க்கமும் திருந்துவதாக இல்லை.

இந்த மாதம் மிக ஆபத்தானது என்றும், கொரோனா மரணங்கள் 48.8 சதவீதம் அதிகரித்திருக்கின்றது என்றும் நீலிக் கண்ணீர் வடிக்கின்றார் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்றுநோய்கள் மற்றும் கொவிட் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னான்டோபுள்ளே.

அவரின் இந்த அறிவிப்புத் தொடர்பில் இரண்டு கேள்விகள் எழுந்துள்ளன.

ஒன்று – இப்படி 'இந்த மாதம் ஆபத்தானது', 'இந்த வாரம் ஆபத்தானது'என்று அறிவிப்பதால் மட்டும் கொவிட்டைக் கட்டுப்படுத்தி விடமுடியுமா? அல்லது இந்த எண்ணிக்கை அறிவிப்புகள் மட்டும் மக்கள் நடமாட்டத்தைக் குறைத்து நிலைமையைச் சீர் செய்து விடுமா? அப்படி இருக்கையில் இந்த அபத்த அறிவிப்புகள் ஏன்? அவற்றினால் என்ன பயன்? இத்தகைய அதிகரிப்புக்களைமுன்வைத்து, அவற்றின் அடிப்படையில் மக்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் ஒழுங்கு முறைகளை, விதிகளைக் கொண்டு வந்தால் அத்தகைய அறிவிப்புகளில் அர்த்தம் இருக்கும். வெறும் எச்சரிக்கைகள் தாராளமாக – மிகத் தாராளமாக – கொடுக்கப்பட்டுவிட்டன. தொடர்ந்து கொடுக்கப்பட்டும் வருகின்றன. ஆனால் அவற்றின் பலாபலன் என்ன? அவரே கூறிய மாதிரி கொவிட்காவு எண்ணிக்கை 48.8 சதவீதமாக அதிகரிக்கின்றதுதான். அவர் அறிவித்த நேரத்துக்கும் இந்தக் கணத்துக்கும் இடையில் அது இன்னும் அதிகரித்தபடி இருக்கும் – இப்படி வெறுமனே புஸ்வான எண்ணிக்கை அறிவிப்புகளை விடுத்துக் கொண்டிருந்தால்.

எண்ணிக்கை அறிவிப்பினால் பயன்பெரிதும் இல்லை என்றால், உரிய மாற்று வழிமுறைகளை எடுப்பதற்காகத் தான் அரசுத் தரப்புக்கு ஆட்சியதிகாரம் என்ற கடிவாளமும், சவுக்கும் கையளிக்கப்பட்டுள்ளன. அவற்றை உரிய முறையில் பயன்படுத்தாமல் கோவில் பிரசங்கி நடத்தும் உபன்னியாசம் போலவும், காதகாலட்சேபம் மாதிரியும் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள் கோட்டா அரசின் எடுபிடிகள்.

ஏதாவது பயனுள்ள கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை எடுத்து அவற்றை நடைமுறைப்படுத்தப்படுவதை விடுத்து இப்படி வாய்ச்சவடால் பிரசங்கங்களைப் புரியும் 'தத்துவமேதைகளை' வைத்து கொவிட்டைக் கட்டுப்படுத்தலாம் என்று நம்புவது வெறும் பகல்கனவுதான்.

இந்த மாதம் ஆபத்தான மாதம் என்றால் அடுத்த மாதம்? அடுத்த வாரம் என்ன? இந்த மாதம் ஆபத்து என்றால் அந்த ஆபத்தையும் கட்டுப்படுத்திக் குறைக்க நடவடிக்கை எடுக்காமல் இப்படி பிரசங்கி மாதிரி அறிக்கைகள், அறிவிப்புகள் வெளியிட்டால் அடுத்த மாதம் ஆபத்து இல்லாமல் மாறி விடுமா?

யார் காதில் பூச்சுற்றுகின்றது கோட்டாபயவின் விதூக ஆட்சி?

மூளைபகுதியளவில் மரணித்துள்ள அதிகாரிகளினால் நாடு நிர்வாகிக்கப்பட்டால் ஏற்படும் சவால்களை நாட்டு மக்களே எதிர்கொள்ள நேரிடும் எனத் தெரிவித்துள்ள ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி, தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் விசேட வைத்திய நிபுணர்களின் கருத்துக்களுக்கு உரிய தரப்பினர் செவி சாய்க்க வேண்டும், இல்லாவிடின் பாரிய விளைவுகள் ஏற்படும் என்று எச்சரித்திருக்கின்றார்.

ஆதுதான் நிலைமை. முதலில் ஆளும் தரப்பில் உரிய கட்டுப்பாட்டு நடவடிக்கை எதனையும் நடைமுறைப்படுத்தாமல் கடந்த ஒன்றரை வருடங்களாக கொவிட் தடுப்பு பற்றி உபன்னியாசம் செய்து கொண்டிருக்கும் பிரமுகர்களின் வாயை மூடப்பண்ண வேண்டும்.

வெறும் வாய்ப்பந்தல் பிரசாரம் இத்தோடு போதும். கொவிட் தடுப்பு விழிப்புணர்வு பரம்பல் எல்லாம் தாராளம். அதை விடுத்து மக்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள், விதிமுறைகளைச் சிந்தித்து பயனுள்ள வேலையைப் பாருங்கள். அதுதான் இப்போது அவசரமானது. அவசியமானது.

# போராட்டத்துக்கு உதவியோரை கைது செய்வதை நிறுத்தவும்!

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

ஆசிரியர்களின் தொழிற்சங்கப் போராட்டத்தை அச்சுறுத்தல்களால் மலினப்படுத்த முடியாது என இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, யாழில் நடைபெற்ற போராட்டத்துக்கு உதவியவர்களை விசாரணை செய்வதையோ அல்லது கைது செய்வதையோ நிறுத்திக்கொள்ள வேண்டுமென்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை ஆசிரியர் சங்க பிரதிநிதிகள் யாழில் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்திய ஊடக சந்திப்பின்போதே சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

இலங்கை ஆசிரியர் சங்கம் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் முன்னெடுத்த வாகனப் பேரணியைக் குழப்புவதற்குப் பொலிஸார் பல முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

எனினும் இந்தத் தடைகளை மீறி எமது பேரணி திட்டமிட்டவாறு நடைபெற்று முடிந்துள்ளது. இதனால் ஆசிரியர்களின் தொழிற்சங்க நடவடிக்கையைக் குழப்பும் பொலிஸாரினதும் அரசினதும் முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது.

இதனையடுத்து பேரணிக்கு அழைத்து வந்த வாகனத்தையும் ஒலி, ஒளிபரப்பு செய்த உரிமையாளர்களையும் பொலிஸார் விசாரணை செய்வதும் கைது செய்வதுமான பழி வாங்கல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் ஆசிரியர்களின் தொழிற்சங்கப் போராட்டத்தை திசை திருப்பி குழப்புகின்ற பொலிஸாரின் நடவடிக்கைகளை முழுமையாக எதிர்க்கின்றோம். அத்தோடு பொலிஸாரின் இத்தகைய செயற்பாட்டை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

போராட்டத்துக்கு உதவிய வாகனத்தின் சாரதியையும் ஒளிபரப்பு சேவை வழங்கியவர்களையும் கைது செய்வதையோ விசாரணை செய்வதையோ பொலிஸார் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் நாம் கோருகின்றோம். - எனத் தெரிவித்தார்.

# கண்டி எசல பெரஹெராவுக்கு போதிய பாதுகாப்புக்கு ஏற்பாடு



கண்டி எசல பெரஹெராவிற்கு போதுமான பாதுகாப்பு வழங்க ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கண்டி மாவட்டத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.ரத்நாயக்க தெரிவித்தார்.

கொரோனா தொற்றுநோய் அச்சுறுத்தல் காரணமாக இந்த ஆண்டு எசலா பெரஹெராவை பொதுமக்களின் பங்கேற்பு இல்லாமல் நடத்த கண்டி எசல பெரஹெரா குழு தீர்மானித்துள்ளது.

மல்வத்த மற்றும் அஸ்கிரிய பிரிவுகளின் மகாநாயக்கர்களின் ஆலோசனையின் பேரில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எசல பெரஹெராவை தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு செய்வதற்கான வசதிகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், பெரஹெராவிற்கு போதிய பாதுகாப்பு வழங்க ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கண்டி மாவட்டத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.ரத்நாயக்க தெரிவித்தார்.

பெரஹெரா செல்லும் வழியில் பொதுமக்கள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் வீதியோர ஹோட்டல்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் சுற்றுலா வழிகாட்டிகளின் உரிமையாளர்கள் பெரஹெராவை பார்க்க பொதுமக்கள் தங்குவதற்கு இடவசதி அளித்து பணம் சம்பாதிக்க தயாராகி வருவதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்ததாகவும், அதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

# 35 லட்சத்துக்கும் மேற்பட்டோர் முழுமையாகத் தடுப்பூசி பெற்றனர்

இலங்கையில் கொரோனாத் தடுப்பூசியை முழுமையாக பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை 35 லட்சத்தைக் கடந்துள்ளது.

அதன்படி, நாட்டில் தடுப்பூசியை முழுமையாக பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை 35 லட்சத்து 29 ஆயிரத்து 515 ஆக பதிவாகியுள்ளது.

இதில் சினோபோர்ம் தடுப்பூசியை 26 லட்சத்து 46 ஆயிரத்து 162 பேர் முழுமையாகப் பெற்றுள்ளனர்.

அதேபோல கொவிஷீல்ட் தடுப்பூசியை 8 லட்சத்து 67 ஆயிரத்து 811 பேர் முழுமையாகப் பெற்றுள்ளனர்.

மேலும் ஸ்புட்னிக் வி தடுப்பூசியை 14 ஆயிரத்து 516 பேர் முழுமையாகப் பெற்றுள்ளனர்.

அதேபோல பைசர் தடுப்பூசியை ஆயிரத்து 26 பேர் முழுமையாகப் பெற்றுள்ளனர்.

இதற்கமைய மதிப்பிடப்பட்ட எண்ணிக்கையில் 15 சதவீதமானோர் முழுமையான தடுப்பூசிகளைப் பெற்றுள்ளனர் எனத் தொற்றுநோயியல் தடுப்பு பிரிவு அறிவித்துள்ளது.

இதேநேரம், முதலாவது தடுப்பூசியை மாத்திரம் பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை 51 சதவீதமாக அதிகரித்துள்ளதென அந்தப் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி, சினோபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸை 90 லட்சத்து 57 ஆயிரத்து 321 பேர் பெற்றுள்ளனர்.

அதேபோல கொவிஷீல்ட் தடுப்பூசியின் முதலாவது டோஸை 11 லட்சத்து 83 ஆயிரத்து 71 பேர் பெற்றுள்ளனர்.

மேலும் ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் முதலாவது டோஸை ஒரு லட்சத்து 59 ஆயிரத்து 81 பேர் பெற்றுள்ளனர்.

அதேபோல பைசர் தடுப்பூசியின் முதலாவது டோஸை 2 லட்சத்து 51 ஆயிரத்து 751 பேர் பெற்றுள்ளனர்.

மேலும் மொடர்னா தடுப்பூசியின் முதலாவது டோஸை 7 லட்சத்து 58 ஆயிரத்து 251 பேர் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஆப்கானிஸ்தானில் சிறைகளில் இருந்து 1,000 கைதிகளை விடுவித்த தலிபான்கள்



ஆப்கானிஸ்தான் நாட்டில் நீண்டகால போர் முடிவுக்கு வராத சூழலில், அந்நாட்டில் இருந்து அமெரிக்கப் படைகளை திரும்ப பெறும் முடிவில் அதிபர் ஜோ பைடன் உள்ளார்.

அதன்படி தற்போது 90 சதவீத அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறிவிட்டன. எஞ்சிய படைகளும் இந்த மாத இறுதிக்குள் திரும்ப பெறப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதுபற்றி பைடன் பேசும்போது, ஆப்கானிஸ்தானிலிருந்து படைகளை திரும்ப பெறும் முடிவு குறித்து வருந்தவில்லை. கடந்த 20 ஆண்டுளில் 1 ட்ரில்லியன் டொலர்களை செலவழித்துள்ளோம். ஆயிரக்கணக்கான இராணுவ வீரர்களை இழந்துள்ளோம். அதே சமயம் விமானம், உணவு, உபகரணங்கள், ஆப்கான் படைக்கு ஊதியம் ஆகியவற்றை அமெரிக்க தொடர்ந்து வழங்கும் எனகூறினார். ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகளை திரும்ப பெறும் திட்டத்தில் எந்த மாற்றமும் இல்லை என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இந்த சூழலில் அமெரிக்க படைகளின் வெளியேற்றம் காரணமாக ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆதிக்கம் பெருகி வருகிறது. ஆப்கானிஸ்தானின் பெரும்பாலான பகுதிகளை அவர்கள் கைப்பற்றி விட்டனர்.

சமீப நாள்களில் அவர்கள் கைப்பற்றி உள்ள 6 முக்கிய நகரங்களில் இருக்கும் சிறைக் கைதிகளை தலிபான்கள் விடுவித்து உள்ளனர். அவர்களில், போதைப் பொருள் கடத்தல் காரர்கள், பிற வழக்குகளில் சிக்கிய கைதிகள் உள்பட 1,000 பேர் விடுவிக் கப்பட்டு உள்ளனர்.

அவர்களில் பலர் போதை பொருள் கும்பலை சேர்ந்தோர், கடத்தல்காரர்கள் மற்றும் ஆயுத கொள்ளையில் ஈடுபட்டவர்கள் ஆவர். இவர்களில் குண்டூஸ் மாகாணத்தில் உள்ள 630 கைதிகள், நிம்ரோஜ் மாகாணத்தில் உள்ள 350 கைதிகள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோரை தலிபான்கள் விடுவித்து உள்ளனர்.

எனினும், தீவிரவாதிகளை பிடித்த பின்பு, சிறைக் கைதிகள் மீண்டும் கைது செய்யப்படுவார்கள் என்று அரசு தெரிவித்து உள்ளது.

# நைஜீரியாவில் இரசாயனத்துடன் சமைக்கப்பட்ட உணவை உட்கொண்ட 24 பேர் உயிரிழப்பு



நைஜீரியாவின் வடமேற்கு பகுதியில் அமைந்துள்ள சோகோட்டோ மாகாணத்தில் உரத்துக்கு பயன்படுத்தும் இரசாயனத்துடன் சமைக்கப்பட்ட உணவை உட்கொண்டதால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 24 பேர் உயிரிழந்தது பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. இதுதொடர்பாக மாநில சுகாதார ஆணையர் டாக்டர் அலி இன்னம் நேற்று வெளியிட்ட அறிக்கையில், பாதிக்கப்பட்டவர்கள் மாநிலத்தின் உள்ளூர் அரசுப் பகுதியான பர்காஜா வார்டின் டான்சான்கே கிராமத்தில் ஒரு குடும்பத்திற்குள் இருக்கின்றனர் என கூறினார். மேலும் இறந்தவர்கள் பொதுவான உப்புக்கு பதிலாக, சமையல் உணவில் சுவையூட்டலாக, ஹ சாவில் கிஷிரின் லாலே எனப்படும் உர வகையைப் பயன்படுத்தினார். துரதிர்ஷ்டவசமாக, உணவைச் சாப்பிட்ட முழு குடும்பமும் தங்கள் உயிரை இழந்தது, இரண்டு பெண் உறுப்பினர்களைத் தவிர, அவர்கள் உணவைச் சோதித்து, தற்போது சிகிச்சைக்கு பதிலளித்து, உயிர் பிழைப்பதற்கான வாய்ப்பை பெற்றுள்ளனர் என்று தெரிவித்தார்.




இந்தியா - அமீரகம்

# பயணிகள் விமானநிலையங்களுக்கு 6 மணிநேரம் முன்னே வர வேண்டும்

## இந்தியா எக்ஸ்பிரஸ் நிறுவனம் அறிவிப்பு

இந்தியாவில் இருந்து அமீரகத்துக்கு வரும் விமான சேவை 3 மாத தடைக்குப் பின்னர் கடந்த 5ஆம் திகதி முதல் பல்வேறு கட்டுப்பாடுகளுடன் இயக்கப்பட்டு வருகிறது. இந்த விமான சேவையானது தமிழகத்தின் சென்னை, திருச்சி உள்ளிட்ட இந்தியாவின் பல்வேறு நகரங்களில் இருந்து இயக்கப்படுகிறது. விமான நிலையத்துக்கு வரும் பயணிகள் டுபாய், அபுதாபி உள்ளிட்ட விசாவை பொறுத்து சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளின் அனுமதியை முறை யாக பெற்றிருக்க வேண்டும். 48 மணி நேரத்துக்குள் செய்யப்பட்ட கொரோனா பரிசோதனை முடிவுகள் க்யூ.ஆர். குறியீட்டுடன் வைத்திருக்க வேண்டும்.

அதன் பின்னர் விமான நிலையத்தில் விமானம் புறப்படுவதற்கு முன்னர் ரேபிட் பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட வேண்டும். இந்த பரிசோதனை விமானம் புறப்படுவதற்கு முன்னர் 4 மணி நேரத்தில் தொடங்கப்படும். விமானம் புறப்படுவதற்கு 2 மணி நேரத்திற்கு முன் பரிசோதனை நிறைவடையும்.

இந்த பரிசோதனை மற்றும் பயணிகள் கொண்டு வரும் ஆவணங்களை சரிபார்க்க வேண்டியிருப்பதால் பொதுமக்கள் விமான நிலையத்துக்கு 6 மணி நேரம் முன்னதாக வரவேண்டும். எனவே கால தாமதத்தை தவிர்க்க இந்த வழிமுறைகளை பின்பற்றி விரை வாக வந்து விமான நிறுவன ஊழியர்களுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டது.



# காட்டுத்தீயை கட்டுப்படுத்த தவறியதற்காக கிரீஸ் மக்களிடம் மன்னிப்பு கேட்ட பிரதமர்

கிரீஸ் நாட்டின் தலைநகர் எதென்ஸ் மற்றும் தீவுப் பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக காட்டுத் தீ பரவி வருகிறது. தீ விபத்து ஏற்பட்ட பகுதிகளில் வெப்பநிலை 45 டிகிரி செல்சியஸ் வரை உள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத வகையில் காட்டுத் தீ கிரீஸ் நாட்டில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்த காட்டுத்தீயில் சிக்கி ஒரு தீயணைப்பு வீரர் உள்பட 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

காட்டுத் தீ காரணமாகப் பல்வேறு சுற்றுலாத் தளங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. காட்டுப் பகுதியில் பரவிய தீ, மக்களின் குடியிருப்புப் பகுதிகளிலும் பரவி வருகிறது. ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்கள் குடியிருப்புப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து உள்ளன. ஹெலிக் கொப்டர்கள் மூலம் தீயை அணைக்கும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது. இதற்கிடையில் காட்டுத்தீயை கட்டுப்படுத்துவதில் கிரீஸ் அரசாங்கம் வேகமாக செயல்படவில்லை என அந்நாட்டு மக்கள் அதிருப்தி தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் கிரீஸ் பிரதமர் கைரியாகாஸ் மிட்சோடகிஸ் கூறுகையில், நாட்டு மக்களின் வலியை என்னால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடிகிறது. காட்டுத்தீயை உரிய நேரத்தில் கட்டுப்படுத்த தவறியதற்காக நான் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். தங்களுடைய இடமும், வீடும் நெருப்புக்கு இரையாவதை யார் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

நாங்கள் எங்களால் முயன்றதைச் செய்தோம். ஆனால் அது போதவில்லை. தோல்விகள் கண்டறிந்து விரைவில் சரிசெய்யப்படும். காட்டுத் தீயால் ஏற்பட்ட சேதத்தைச் சரி செய்ய 50 கோடி யூரோ ஒதுக்கப் பட்டு உள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்றில் ஜனநாயகப் படுகொலை!

## ராகுல்காந்தி கருத்து




இந்திய நாடாளுமன்ற மழைக் கால கூட்டத்தொடர் முன்கூட்டியே முடிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ராகுல் காந்தி மற்றும் பிற எதிர்க் கட்சி எம்.பிக்கள் இன்று பேரணியாகச் சென்றுள்ளனர்.

நடந்து முடிந்த நாடாளுமன்ற மழைக் கால கூட்டத்தொடரில் 'பெகாசஸ்' உளவு விவகாரம், வேளாண் சட்டங்கள், பெற்றோல், டீசல் விலை உயர்வு உள்ளிட்ட பிரச்சினைகளை எழுப்பி எதிர்க்கட்சிகள் தினமும் அமளியில் ஈடுபட்டன.

இதனால், நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் முடங்கின. பெகாசஸ் உளவு விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும், சுப்ரீம் கோர்ட் கண்காணிப்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று எதிர்க் கட்சிகள் வலியுறுத்தின.

இந்திய மத்திய அரசுக்கு நெருக்கடி கொடுப்பதற்காக எதிர்க்கட்சிகள் கை கோர்த்து ஒற்றுமையாக செயல்பட்டன. இதனால் இந்திய மத்திய அரசு திட்டமிட்ட நாள்களுக்கு முன்னதாகவே மழைக் கால கூட்டத்தொடரை திகதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தது. நாடாளுமன்ற எதிர்க் கட்சித் தலைவர்கள், இந்த நிலையில் மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே அலுவலகத்தில் சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

இதனையடுத்து மத்திய அரசின் மூன்று விவசாயச் சட்டங்களை ரத்து செய்யக் கோரியும், நாடாளுமன்ற கூட்டத் தொடர் முன் கூட்டியே முடிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் எதிர்க்கட்சித் தலைவர்கள் இன்று நாடாளுமன்றத்தில் இருந்து பேரணியாகச் சென்றுள்ளனர். பேரணிக்கு ராகுல்காந்தி தலைமை தாங்கினார். பின்னர் ராகுல்காந்தி கருத்துத் தெரிவிக்கும்போது, எதிர்க்கட்சிகளை நாடாளுமன்றத்தில் பேச அனுமதிக்காததால் நாங்கள் இன்று ஊடகங்களுடன் பேச இங்கு வெளியே வர வேண்டியிருந்தது. இது ஜனநாயகப் படுகொலையாகும் எனக் கூறியிருக்கிறார்.





# புதுக்கோட்டை பொற்பனைக்கோட்டை அகழாய்வில் பழங்கால செங்கல் கால்வாய் கண்டறியப்பட்டது

தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டம் பொற்பனைக்கோட்டையில் நடைபெற்றுவரும் அகழாய்வில் இன்று பழங்கால செங்கல் கால்வாய் ஒன்று கண்டறியப்பட்டுள்ளது.

சங்ககாலக் கோட்டை அமைந்துள்ள இடமாகக் கருதப்படும் தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டம் பொற்பனைக் கோட்டை கிராமத்தில் சுமார் 1.62 கி.மீ. சுற்றளவில் 30 அடி உயரத்தில் அகழியுடன் உள்ள சங்க கால சுடுமண் செங்கல் கட்டுமான கோட்டை உள்ளது. இதன் உள் பகுதியில், கடந்த மாதம் 30ஆம் திகதி முதல் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக பேராசிரியர் இனியனை இயக்குநராகக் கொண்டு அகழாய்வுப் பணிகள்நடந்துவருகின்றன.

முதல் கட்டமாக வேப்பங்குடி விவசாயி கறுப்பையாவின் நிலத்தில் அகழாய்வுப் பணிகள் தொடங்கி சுமார் 1.5 அடி ஆழத்திற்குத் தோண்டப்பட்டுள்ள நிலையில், இதுவரை பலவகையான பானை ஓடுகள் மற்றும் பாசி, மணிகள் போன்றன கண்டெடுக்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் நடந்த அகழாய்வில் பழங்காலத்தில் பயன்படுத்திய மண் கிண்ணங்கள், மேல் மூடிக் குமிழ், பெண்கள் விளையாடிய வட்டச் சில் போன்ற பல சுடுமண் பொருள்கள் கிடைத்துள்ளன.

அதனையடுத்து இன்று நடைபெற்ற அகழாய்வில் சங்க காலச் செங்கல் கால்வாய் கண்டறியப்பட்டுள்ளது. இதன் மூலம் சிந்து சமவெளி நாகரிகத்திற்கு இணையான நகரம் இங்கு இருந்திருக்கலாம் என்றும், ஒரு பழைமையான நகரம் இங்கு புதைந்து இருக்க வாய்ப்புகள் அதிகம் உள்ளன எனவும் அகழ்வாய்வுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். மேலும் இன்னும் சில அடிகள் அகழாய்வு செய்யும்போது பழைய கட்டடத்தின் கட்டுமானம் கிடைக்கலாம் என்ற எதிர்பார்ப்புகளுடன் அகழாய்வுப் பணிகள் தொடர்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டறியப்பட்டுள்ள பொருள்களை வைத்துப் பார்க்கும்போது, இந்த பொற்பனைக்கோட்டையில் சங்க காலத்தை ஒட்டிய காலத்தில் வழமையான மக்கள் வாழ்ந்ததற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன என அகழ்வாய்வுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

# காதலை ஏந்க மறுக்கும் பெண்களை துன்புறுத்தினால் கடும் நடவடிக்கை!

## கேரள முதல்வர் எச்சரிக்கை



காதலை ஏற்க மறுக்கும் பெண்களைத் தாக்கினாலோ, துன்புறுத்தினாலோ கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கேரளா முதல்வர் பினராயி விஜயன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த மாதம் 30 ஆம் திகதி, கேரளாவின் எர்ணாகுளம் மாவட்டத்தில் காதலை ஏற்காத மருத்து-வக்கல்லூரி மாணவியை இளைஞர் ஒருவர் சுட்டுக்கொன்றுவிட்டு தானும்தற்கொலைசெய்துகொண்ட விவகாரம் அந்த மாநில சட்டசபையில் எதிரொலித்தது.

இவ்விவாகரம் குறித்துப் பதிலளித்துப் பேசிய முதல்வர் பினராயி விஜயன், "காதல் என்ற பெயரில் பெண்களைத் துன்புறுத்துவோருக்கு எதிராக பொலிஸ் ஒருபோதும் மென்மையாக நடந்து கொள்ளாது. காதலை ஏற்க மறுக்கும் பெண்களைத் தாக்கினாலோ துன்புறுத்தினாலோ கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்படுவது தொடர்ந்து உறுதி செய்யப்படும். பெண்களை அச்சுறுத்துதல், பின்தொடர்தல் உள்ளிட்ட புகாருக்கு ஆளானவர்களை பொலிஸார் தொடர்ந்து கண்காணிப்பார்கள்.

திருமண நிகழ்வுகளைப்பொறுத்தவரையில், வரதட்சணைத் திருமணங்களில் மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொள்ளக்கூடாது.

அவர்கள் சமூக ரீதியாக தனிமைப்படுத்தப்பட வேண்டும். பெண்கள் மீதான சைபர் தாக்குதல் வழக்குகளில் தற்போதுள்ள சட்டம் இறுக்கமாக அமுல்படுத்தப்படும். இதுபோன்ற புகார்கள் மீது கடுமையான நடவ டிக்கை எடுக்கப்படும்" என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

# கட்டுப்பாடுகளை மீறுவதால் சென்னையில் மீண்டும் கொரோனாத் தொற்று அதிகரிப்பு



கொரோனாக் கட்டுப்பாடுகளை மீறி பொது நிகழ்ச்சிகளை நடத்தினால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என சென்னை மாநகராட்சி எச்சரித்துள்ளது. திருமணம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளுக்குப் பதிவு செய்யப்பட்ட இரண்டாயிரத்து 812 மண்டபங்கள் மற்றும் விடுதிகளில் இதுவரை வருவாய்துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டதில் 60 இடங்களில் விதிமீறல்கள் கண்டறியப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள், மண்டப உரிமையாளர்களிடம் இருந்து 2 லட்சத்து 29 ஆயிரம் ரூபா வரையில் அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளதாக சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது.

கடந்த வாரம் அரசின் தடையை மீறி நடத்தப்பட்ட பொது நிகழ்ச்சியின் மூலம் அதில் கலந்து கொண்ட 20 நபர்களுக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாகவும், எனவே பொது இடங்களில் மக்கள் அதிகளவில் கூடுவதைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது போன்று அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை மீறும் அமைப்புகள், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் மீது குற்றவியல் தண்டனைச் சட்டம் 188 பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சென்னை மாநகராட்சி எச்சரித்துள்ளது. இதனிடையே, நீண்ட நாள்களுக்கு பிறகு கொரோனாத் தொற்றுப் பரவல் எண்ணிக்கையில் மாவட்ட அளவில் சென்னை மீண்டும் முதலிடத்திற்கு வந்துள்ளது. தமிழ் நாட்டில் தினசரி கொரோனாப் பாதிப்பு ஏற்ற இறக்கத்துடன் இரண்டாயிரத்தை நெருங்கியே பதிவாகிவருகிறது. அந்த வகையில் கடந்த 24 மணி நேரத்தில் ஆயிரத்து 964 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் கடந்த 11 நாள்களில் 15 லட்சத்து 60 ஆயிரத்து 754 பேருக்கு பரிசோதனை செய்ததில், 21 ஆயிரத்து 497 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட அளவில் கொரோனாப் பாதிப்பில் கோவை முதலிடத்தில் இருந்துவந்த நிலையில் மீண்டும் சென்னையில் அதிகப் பேருக்குத் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. நெருக்கடி மிகுந்த சென்னை மீண்டும் தொற்று எண்ணிக்கையில் முதலிடத்திற்கு வந்திருப்பதை எச்சரிக்கையாகக் கருத வேண்டும் என்று வல்லுநர்கள் கூறுகின்றனர். சென்னையில் 200 என்ற அளவிலேயே இருந்த பாதிப்பு ஒரே நாளில் 243 ஆக அதிகரித்துள்ளது. கடந்த 11 நாள்களில் சென்னையில் இரண்டாயிரத்து 156 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளமை கவனிக்கத்தக்கது.

# காங்கிரஸ் கட்சியின் டுவிட்டர் கணக்கு தற்காலிகமாக முடக்கம்

விதிமுறைகளை மீறி செயல்பட்டதாகக் கூறி காங்கிரஸ் கட்சியின் உத்தியோகபூர்வ கணக்கை டுவிட்டர் நிறுவனம் தற்காலிகமாக முடக்கியுள்ளது.

ஏற்கனவே காங்கிரஸ் கட்சி எம்.பி. ராகுல் காந்தி, மாணிக்கம் தாகூர் உள்ளிட்டோரது டுவிட்டர் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. இந்திய மத்திய அரசின் தலையீட்டால்தான் டுவிட்டர் கணக்குகள் முடக்கப்படுகின்றன என காங்கிரஸ் கட்சி ஏற்கனவே குற்றஞ்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



படையினர் வசமுள்ள

# அரச, தனியார் காணிகளை மீள கையளித்தல்; கலந்துரையாடல் மட்டக்களப்பில் இடம்பெற்றது

இடம்பெயர்ந்த மக்களை மீள குடியமர்த்துவது மற்றும் பொலிஸார், படையினிடம் உள்ள அரச மற்றும் தனியார் காணிகளை மீள கையளிப்பது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று நேற்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலின் போது கடந்த காலங்களில் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களை மீள குடியமர்த்துவது மற்றும் பொலிஸார், படையினிடம் உள்ள அரச மற்றும் தனியார் காணிகளை மீள கையளித்து மக்களது இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்திக் கொள்வது தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன் போது தனியார் காணிகள், கட்டடங்கள், அரச காணிகள், அரச கட்டடங்கள், ஆலயங்கள், பாடசாலைகள் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடங்கள் போன்றவற்றில் சில இன்னமும் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படாமை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மண்முனை வடக்கு, மண்முனைப்பற்று, களுவாஞ்சிகுடி, வெல்லாவெளி, பட்டிப்பளை, கோறளைப்பற்று மத்தி, கிரான் மற்றும் வாகரை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இன்னமும் தனியார் மற்றும் அரச காணிகளில் படையினர் நிலைகொண்டிருப்பதனால் மக்களது இயல்பு வாழ்வில் தடங்கல் இருப்பதாக பிரதேச செயலாளர்களினால் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்போது பாதுகாப்புப் படையினர் தம்வசம் உள்ள காணிகளில் பெரும்பாலான பகுதிகளை இவ்வருட இறுதிக்குள் உரிய நபர்களிடம் வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

குறித்த கலந்துரையாடலில் 231 ஆவது படைப்பிரிவின் பிரிகேட் கொமாண்டர் திலீப பண்டார, மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஆர்.குமாரசிறி, காணிப் பிரிவிற்கான மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.நவரூபரஞ்சினி முகுந்தன், காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் நே.விமல்ராஜ், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. சசிகலா புண்ணியமூர்த்தி, முப்படையினர் மற்றும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்களும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றியவாறு கலந்துகொண்டிருந்தனர். அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கான மாநாட்டின் போது உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களை மீள குடியமர்த்துதல், படையினரிடம் உள்ள அரச, தனியார் நிறுவனங்களின் காணிகள் மற்றும் கட்டடங்களை மீளக் கையளித்தல் தொடர்பாக பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரெட்ண மற்றும் வெளிநாட்டு அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாகவே இக் கலந்துரையாடல் இடம்பெற்றதாக மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் இதன்போது தெரிவித்துள்ளார்.





# மட்டு. திருக்கோவில் பிரதேசத்தில் கொவிட் மரணம் இரண்டாக அதிகரிப்பு

திருக்கோவில் பிரதேசத்தில் இரண்டாவது கொவிட் மரணம் இடம்பெற்றதைத் தொடர்ந்து பிரதேச மட்ட கொவிட் 19 தடுப்பு செயலணிக் குழு அவசரமாகக் கூடி பல்வேறு பாதுகாப்பு வழிமுறைகளை இறுக்கமாக நடைமுறைப்படுத்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ் கூட்டமானது திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரனின் தலைமையில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று புதன்கிழமை பிற்பகல் வேளையில் இடம்பெற்றிருந்தது.

திருக்கோவில் பிரதேசத்தில் தம்பிலுவில் 01 கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் 84 வயதுடைய ஆண் ஒருவர் கொவிட் காரணமாக மரணத்தைத் தொடர்ந்து பிரதேசத்தில் கொவிட் மரணம் இரண்டாக அதிகரித்ததைத் அடுத்து அவசரமாக கூடிய பிரதேச மட்ட கொவிட் 19 தடுப்பு செயலணிக் குழுக் கூட்டமானது பல்வேறு பாதுகாப்பு தீர்மானங்கள் தொடர்பாக ஆராய்ந்து இருந்தன.

அந்தவகையில் திருக்கோவில் பிரதேசத்தில் சுகாதார தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிச் செயற்படும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தல் வெளிப் பிரதேசங்களில் இருந்து வருகின்ற நபர்கள் தொடர்பாக தவல்களை சேகரித்தல், தடுப்பூசி ஏற்றிக் கொண்டமைக்கான அட்டையை பரிசோதித்தல், ஆலய உற்சவங்கள் திருமண நிகழ்வுகளை மிகக் குறைந்த எண்ணிக்கையான நபர்களுடன் சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக முன்னெடுத்தல், பிரதேசத்தில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களை தினமும் கண்காணித்தல் மற்றும் கொவிட் தொற்றாளர்களுக்காக திருக்கோவில் பிரதேசத்தில் தனிமைப்படுத்தல் நிலையம் ஒன்றினை அமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு இருந்தன.

# ஐந்து ஆயிரம் போதை மாத்திரைகளுடன் அக்கரைப்பற்று பிரதேசத்தில் இருவர் கைது

அம்பாறை அக்கரைப்பற்று பிரதேசத்தில் 5 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் இருவரை நேற்று இரவு இராணுவபுலனாய்வு பிரிவினர் விசேட அதிரடிப்படையுடன் இணைந்து கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்ட இரு போதை மாத்திரை வியாபாரிகளையும் கைப்பற்றப்பட்ட போதை மாத்திரைகளுடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.



# பிறைந்துறைச்சேனை பிரதேசத்தில் ஹெரோயினுடன் இருவர் கைது



வாழைச்சேனை பிறைந்துறைச்சேனை பிரதேசத்தில் ஐஸ் போதைப் பொருள் மற்றும் ஹெரோயினுடன் இருவரை நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளனர் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் கைது செய்யப்பட்ட இருவரும் பிறைந்துறைச்சேனையைச் சேர்ந்தவர்கள் எனவும், அவர்கள் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர் எனத் தெரிவித்த பொலிஸார் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பு கரடியனாறு பகுதியில் துப்பாக்கிச் சூடு; ஒருவர் படுகாயம்

மட்டக்களப்பு கரடியனாறு பகுதியில் சட்ட விரோதமாக மணல் ஏற்றிச் சென்ற டிராக்டர் பொலிஸாரின் சமிக்கையை மீறிச் சென்றமையால் அதன் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மட்டு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சம்பவம் நேற்று (வியாழக்கிழமை) அதிகாலையில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கரடியனாறு பங்குடாவெளிச் சந்தியில் சம்பவதினமான நேற்று அதிகாலை 3 மணி அளவில் சட்டவிரோத மணல் டிராக்டரில் எடுத்துச் சென்ற போது பொலிஸார் டிராக்டரை நிறுத்த முயற்சித்த போதும் டிராக்டர் பொலிஸாரின் சமிக்கையை மீறிச் சென்ற நிலையில் பொலிஸார் அதனை துரத்திச் சென்று டிராக்டர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டமையை அடுத்து அதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

செங்கலடி பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய துசாந்தன் என்பவரது தோள் பட்டை பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கொரோனா சடலங்களை அடக்கம்செய்ய அம்பாறையிலும் இடம் தெரிவுசெய்யப்பட்டது

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் இறக்காமத்தில் கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்ய புதிய நிலப்பகுதி தெரிவு செய்யப்பட்டுள்ளதாக மருத்துவ தொழில்நுட்ப சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

புதிய நிலம் மூன்று ஏக்கர் பரப்பளவில் உள்ளதாகவும் அதன்படி, அப்பகுதியில் 2 ஆயிரத்து 400 சடலங்களை அடக்கம் செய்ய முடியுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், இந்த நிலம் கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்ய ஏற்ற இடம் என்று அம்பாறை மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார் எனவும் அதற்குத் தேவையான பரிந்துரைகளைச் செய்ய தொழில்நுட்பக் குழு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஓட்டமாவடியில் இதுவரையில் கொரோனா சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டு வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல். போட்டிகள் செப்டெம்பரில் ஆரம்பம் மேலும் பல சுகாதார நடைமுறைகள் அமுல்




இந்த வருட ஐ.பி.எல். தொடரின் மீதமுள்ள போட்டிகள் ஐக்கிய அரபு இராச்சியத்தில் செப்டெம்பர் மாதம் ஆரம்பமாகவிருக்கும் நிலையில் பாதுகாப்புக் காரணங்களுக்காக சில விதிகளை ஐ.பி.எல். நிர்வாகம் மாற்றியுள்ளது

இரண்டாவது சுற்று லீக் ஆட்டங்களையும், சூப்பர் லீக் மற்றும் இறுதி ஆட்டத்தையும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடத்துவதற்கு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை பி.சி.சி.ஐ. முடிவு செய்தது. இதையடுத்து, அதற்கான போட்டி அட்டவணை மற்றும் திகதிகளையும் பி.சி.சி.ஐ. வெளியிட்டுள்ளது.

முதல் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும், மும்பை இந்தியன்ஸ் அணியும் மோதுகின்றன. 27 நாள்கள் நடக்கும்போட்டித் தொடரில் மொத்தம் 31 ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

கொரோனா அச்சம் காரணமாக இந்தத் தொடரில் சில புதிய விதிமுறைகளைபி.சி.சி.ஐ. உள்வாங்கியிருக்கிறது. அதில் முக்கியமானது துடுப்பாட்டவீரர் சிக்ஸர் அடித்து பந்து அரங்கிற்கு வெளியே சென்றாலும், மைதானத்தின் எல்லைக் கோட்டை விட்டு இருக்கைப்பகுதிக்குச் சென்றாலும் நான்காவது நடுவர் மூலம் புதிய பந்து மாற்றப்படும். வெளியே சென்றபின் எடுத்துவரப்படும் பந்து கிருமிநீக்கம் செய்யப்பட்டு சேமிப்பில் வைக்கப்பட்டு மறுபடியும் பயன்படுத்தப்படும்.

பி.சி.சி.ஐ. நடத்திய ஆய்வின்படி, பந்தின் மூலம் கொரோனாவைரஸ்பரவும் வாய்ப்புமிகக்குறைவுதான் என்று கண்டறியப்பட்டிருந்தாலும், அதனால் பரவுவதற்கான வாய்ப்பை உருவாக்கிவிடக்கூடாது என்பதில் கவனமாக இருப்பதால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கழிவறைகள், குளியலறை போன்றவற்றில் வீரர்களும் ஊழியர்களும் தமது எச்சில், தும்மல் போன்றவை தொடர்பில் எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

போட்டிகளுக்கு முன்னதாக 8 அணிகளைச் சேர்ந்த வீரர்களும் ஊழியர்களும் 6 நாள்கள் தனிமையில் இருக்கவேண்டும். அந்தக்காலகட்டத்தில் 3 முறை எடுக்கப்படும் பி.சி.ஆர். பரிசோதனையில் நெகட்டிவ் வர வேண்டும். அதன்பின்புதான் பயோ-பபிள் சூழலுக்குள் அவர்களால் செல்ல முடியும்.

வீரர்கள் அருகிலுள்ள கோல்ப் மைதானத்துக்குச் செல்லலாம். ஆனால், 24 மணிநேரத்துக்கு முன்பாக, ஐ.பி.எல். மருத்துவ அதிகாரியிடம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். கோல்ப் மைதானம் முழுமையாக, ஐ.பி.எல். வீரர்கள் மட்டுமே பயன்படுத்துவதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதால் அங்கு வேறு யாருக்கும் அனுமதி வழங்கப்படாது. கோல்ப் கிளப்பில் இருக்கும் மதுபான விடுதி, உணவகம், தேனீர் விடுதி, உடற்பயிற்சிக்கூடம் போன்றவற்றுக்குச் செல்ல வீரர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. கோல்ப் மைதானத்தில் உள்ள குளியல் அறையையும் பயன்படுத்த வீரர்களுக்கு அனுமதி வழங்கப்படாது.

அதேபோல்பானஇடைவேளைகளில் தனித்தனியான பானப் போத்தல்களைத்தான் வீரர்கள் பயன்படுத்த வேண்டும். ஒருவர் குடித்த மீதியை மற்றொரு வீரர் பயன்படுத்தக்கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.




## மீண்டும் ஒருமுறை சம்பியன்ஸ் லீக்கை வெல்லலாம்! பி.எஸ்.ஜி. அணி குறித்து மெஸ்ஸி பெருமிதம்

கால்பந்தாட்ட உலகின் சூப்பர் ஸ்டாரான லியோனல் மெஸ்ஸி பார்சிலோனா கால்பந்தாட்ட கழகத்திலிருந்து விலகி பிரான்ஸ்நாட்டின்பிரபலகிளப்அணியான பரிஸ் செய்ன்ட் ஜெர்மைன் (பி.எஸ்.ஜி.)யில் இணைந்துள்ளார். மெஸ்ஸி அந்த அணிக்காக இரண்டு ஆண்டுகள் விளையாட ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளார்.

இதனையடுத்து ஊடகவியலாளர்களைச்சந்தித்த அவர், மீண்டும்சம்பியன்ஸ் லீக்கை வெல்வதற்கான வாய்ப்பு அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மீண்டும் ஒருமுறை சம்பியன்ஸ் லீக்கை வெல்வது பற்றிய எனது கனவு குறித்து நான் பலமுறை சொல்லியுள்ளேன். இப்போது அந்த வாய்ப்பு கைகூடி வருவதற்கான சரியான இடத்தில் உள்ளேன். நிச்சயம் அது நடக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. சில நேரங்களில் உலகின் தலைசிறந்த அணிகள் வெற்றி வாய்ப்பை இழக்கும். அண்மைக் காலமாக பி.எஸ்.ஜி. சம்பியன்ஸ் லீக் தொடரில் வெற்றியை நெருங்கி வருகிறது. மிகச் சிறந்த அணிகள் விளையாடும் தொடர் அது என மெஸ்ஸி தெரிவித்துள்ளார்.

பிரேஸில்அணியின்நெய்மர், பிரான்ஸ் அணியின்கிலியன்எம்பாப்பேஉடன்மெஸ்ஸியும் கூட்டு சேர்ந்து பி.எஸ்.ஜி. அணிக்காக விளையாடவுள்ளனர். கூடிய விரைவில் மெஸ்ஸி அந்த அணிக்காக களம் இறங்கி விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ரோஜர்ஸ் கிண்ண டென்னிஸ் தொடர் 2ஆம் சுற்றில் மெட்வடேவ் வெற்றி

டொரன்டோவில் நடந்து வரும் ரோஜர்ஸ் கிண்ண டென்னிஸ் தொடரின் இரண்டாவது சுற்றில் ரஷ்ய வீரர் டனில் மெட்வடேவ் போராடி வெற்றிபெற்றார்.

நேற்று நடந்த இந்தப் போட்டிகளில் மெட்வடேவுடன் கசகஸ்தான் வீரர் அலெக்சாண்டர் பப்ளிக் மோதினார். ஏ.டி.பி. தரவரிசையில் தற்போது 2 ஆம் இடத்தில் உள்ள மெட்வடேவ், முதல் செட்டை 4-6 என்ற கணக்கில் அலெக்சாண்டரிடம் இழந்தார். அதன் பின்னர் சுதாகரித்துக் கொண்ட அவர், 6-3, 6-4 என அடுத்தடுத்து 2 செட்களைக் கைப்பற்றி, அலெக்சாண்டரை வீழ்த்தினார்.

இந்தப்போட்டி குறித்து மெட்வடேவ் “முதல் செட் கையை விட்டுப்போனது குறித்து கவலைப்படவில்லை. கடினத் தரை ஆடுகளங்களில் என்னை வீழ்த்துவது சிரமம் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது” என்று கூறினார். கடந்த 2019 ஆம் ஆண்டு இதே தொடரில் ஒரு செட்டைக் கூட இழக்காமல், இறுதிவரை முன்னேறிய மெட்வடேவ், இறுதிப்போட்டியில் நடாலிடம் தோல்வியடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



## ஜூலை மாதத்துக்கான ஐ.சி.சியின் விருது ஷகிப் அல் ஹசன், ஸ்டெபானி டெய்லர் தெரிவு

சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் (ஐ.சி.சி.) சார்பில் மாதந்தோறும் சிறந்த வீர வீராங்கனைகள் தேர்வு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டு வருகிறது. முன்னாள் வீரர்கள், ஒளிபரப்பு நிறுவனத்தினர் உள்ளிட்ட ஐ.சி.சி. வாக்களிப்புக் குழுவினரால் பரிந்துரை செய்யப்படும் பட்டியலிலிருந்து ரசிகர்கள் வாக்களித்துவிருதுக்குரியநபரைத்தேர்வுசெய்வார்கள்.

கடந்த ஜூலை மாதத்துக்கான சிறந்த வீரராக பங்களாதேஷ் கிரிக்கெட்அணியின் சகலதுறை வீரர் ஷகிப் அல் ஹசன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் ஆஸ்திரேலியாவின் மிட்செல் மார்ஷ், மேற்கிந்தியத் தீவுகளின் ஹைடன் வோல்ஷ் ஆகியோரை முந்திக்கொண்டுஇந்தவிருதைத்தனதாக்கியிருக்கிறார். கடந்த மாதம் நடந்த சிம்பாப்வேக்கு எதிரான ஒரு நாள் மற்றும் ரி-20 போட்டிகளில் துடுப்பாட்டத்திலும் பந்துவீச்சிலும் ஷகிப் அல் ஹசன் சிறப்பாக செயல்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறந்த வீராங்கனை விருதுக்கு மேற்கிந்தியத் தீவுகளின் கப்டனான ஸ்டெபானி டெய்லர் தெரிவாகியிருக்கிறார். பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு நாள் தொடரில் 175 ஓட்டங்களோடு 3 விக்கெட்டுகளையும் வீழ்த்திய அவர் அனைவரின் கவனத்தையும் ஈர்த்து இந்த விருதைக் கைப்பற்றியிருக்கிறார்.





# கொரோனா குணமடைவு 3 லட்சத்தைக் கடந்தது

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 2 ஆயிரத்து 244 பேர் குணமடைந்து நேற்று (புதன்கிழமை) வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 லட்சத்து 406 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரையில் 3 லட்சத்து 39 ஆயிரத்து 92 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேநேரம், நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 340 ஆகப் பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பல்வேறு வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் அளவெட்டியில் கைது

வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சந்தேகநபரொருவரை கைது செய்துள்ளோம் எனத் தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

யாழ்ப்பாணம் - அளவெட்டி, நாகினாவத்தை பகுதியில் வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் பிரிவுகளில் பல வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 2 வாள்கள் மற்றும் சந்தேகநபரால் கொள்ளையிடப்பட்ட இலக்க தகடற்ற இரண்டு மோட்டார் சைக்கிள்கள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து, சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தெல்லிப்பழைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மடு திருத்தல ஆவணித் திருவிழாவில் பங்கேற்பதை நிறுத்துமாறு கோரிக்கை

## தூர இடங்களிலிருந்து வருபவர்கள்



மடு திருத்தலத்தின் ஆவணி திருவிழாவில் கலந்துகொள்ள நீண்ட பயணங்களை மேற்கொண்டு வருகின்றவர்கள் தமது பயணங்களை நிறுத்துமாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணித் திருவிழா தொடர்பாக ஆராயும் அவசர கலந்துரையாடல் மடு திருத்தலத்தில் நேற்று (புதன்கிழமை) மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது.

இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் தெரிவித்த அவர் -

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலை உள்ளது. அரசாங்கத்தினதும் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளினதும் சுகாதார வழிகாட்டுதல்களின்படி நாங்கள் நடந்து கொள்ள வேண்டும்.

அன்றையதினம் மடு அன்னையின் ஆவணித் திருவிழா திருப்பலிகள் நான்கு ஒப்புக் கொடுக்கப்படும்.

குறித்த திருப்பலிகளில் மொத்தமாக 150 நபர்கள் மாத்திரம் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே இந்தக் கால கட்டத்தில் மாகாணங்களுக்கு இடையே உள்ள பயணக் கட்டுப்பாடுகள் ஓரளவு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும் மடு அன்னையின் திருவிழா அன்று மடு திருத்தலத்துக்கு வெளி மாவட்டங்களில் இருந்து வருகை தர முடியாது.

மடு வீதி வரை வந்தாலும் மடு திருத்தலத்துக்குள் செல்ல முடியாமல் பாதுகாப்புத் தரப்பினரால் திருப்பி அனுப்பப்படுவார்கள்.

ஏனைய நாள்களில் நீங்கள் ஆலயத்துக்கு காலையில் வந்து மாலையில் திரும்பிச் செல்ல முடியும். தங்கி நிற்க முடியாது. பல தூர இடங்களில் இருந்து வருகை தர முயற்சிக்கின்றனர். அவ்வாறு வருகின்றவர்கள் தமது வருகையை நிறுத்திக்கொள்ளுங்கள். இங்கு வந்தால் தங்க இடம் இல்லை. திருவிழாவிற்கு ஆலயத்தினுள் செல்ல முடியாத நிலை ஏற்படும்.

மேலும் மடு திருத்தலத்தை அண்மித்த கிராமங்களான பண்டிவிரிச்சான், பரப்புக்கடந்தான், பாலம்பிட்டி, தட்சணா மருதமடு போன்ற கிராமங்களுக்குக் கூட செல்ல முடியாத நிலை உள்ளது. எனவே பல்வேறு பிரச்சினைகள் உள்ளமையால் உங்களின் நீண்ட பயணத்தை நிறுத்தி உங்கள் வீடுகளில் இருந்து தொலைக்காட்சி, இணையத்தளங்கள் ஊடாக திருவிழாவை பார்க்க முடியும். - எனத் தெரிவித்தார்.

# 48.8 வீதமாக சாவு உயர்வு!

## சுதர்ஷினி தகவல்



நாட்டில் பதிவாகும் இறப்புகளின் எண்ணிக்கை 48.8 வீதம் ஆகவும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 30 வீதம் ஆகவும் அதிகரித்துள்ளது என ஆரம்ப சுகாதார இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

கம்பஹாவில் நேற்று புதன்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் இந்த வாரம் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இந்த சூழ்நிலையில் முடக்க கட்டுப்பாடுகள் அவசியம் என்றால் அதற்குரிய நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட தரப்பினரால் எடுக்கப்படும் என்றும் கூறினார்.

இதேநேரம் ஒன்றுகூடல்கள் மற்றும் சன நெரிசலான பகுதிகளை பொது மக்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே கேட்டுக்கொண்டார்.

# இரு கடற்றொழில் பண்ணைகள் திறந்து வைத்துள்ளார் டக்ளஸ்!

## வேலணையில் நேற்று நடந்தது



வேலணை வடகிழக்கு பகுதியில் இரண்டு கடற்பண்ணைகள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நேற்று (புதன்கிழமை) திறந்து வைக்கப்பட்டன. குறித்த இரு பண்ணைகளையும் அமைப்பதற்கு கடந்த மூன்று வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட முயற்சியின் பலனாக அவை உத்தியோகபூர்வமாக நேற்று திறந்து வைக்கப்பட்டன. அவற்றில் ஒரு பண்ணை நண்டு உற்பத்திக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இப்பண்ணையில், சுமார் 27 ஏக்கர் பரப்பில் 30 லட்சம் ரூபா நிதியில் பெருங்கடல் அக்வா பண்ணை நிறுவனம் உற்பத்தியை மேற்கொள்ளவுள்ளது. மற்றைய பண்ணையில் இறால் உற்பத்தி மேற்கொள்ளப்படவுள்ளது. இப் பண்ணையில் அன்னை அன் சன்ஸ் நிறுவனம் சுமார் 144 ஏக்கர் பரப்பில் 72 கோடி ரூபா நிதியில் உற்பத்தியை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் சம்பிரதாயப்பூர்வமாக கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு இன்று இடம்பெற்றது. செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்திற்கான கொடிச்சீலை சம்பிரதாயப்பூர்வமாக ஆலயத்தில் ஒப்படைக்கப்படுவது பாரம்பரிய வழக்கமாகும்.

நல்லூரிலுள்ள செங்குந்த மரபினர் வருடா வருடம் கொடியேற்றத்திற்கான கொடிச்சீலையை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதன் படி யாழ் சட்டநாதர் சிவன் ஆலயத்திற்கு அருகில் உள்ள வேல் மடம் முருகன் ஆலயத்தில் காலை 9 மணிக்கு நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து அங்கிருந்து கொடிச்சீலை மாட்டுவண்டிலில் பருத்தித்துறை வீதி ஊடாக எடுத்து செல்லப்பட்டு காலை 10.00 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தினை வந்தடைந்தது. அங்கு ஆலயத்தின் வெளிவீதி உலாசென்று சுபநேரத்தில் பூஜைகள் இடம்பெற்று கொடிச்சீலை நல்லூர் ஆலய பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது. நாளை காலை பத்து மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மகோற்சவ பெருவிழா தொடர்ந்து 25நாள்கள் இடம்பெறவுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.08.2021இல் வெளியிடப்பெற்றது.